பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

239—

ஆரம்ப சுகாதார நிலையம்

*4585—**திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, காவகாரன்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காவகாரப்பட்டி கிராமம் என்பது எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,02,793 ஆகும். காவகாரன்பட்டி கிராமத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,510. எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப அங்கு ஏற்கெனவே செயல்பட்டுவருகின்ற 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான அளவில் உள்ள காரணத்தினால் காவகாரன்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

2014 ஜூலை 23]

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறமும், தமிழும், ஆலயத் தெய்வங்களும் உடனிருக்க, புண்ணிய பூமியில் ஒவ்வொரு நாளும் புகழ் மாலை சூட, மனித குலம் மகிழ்ச்சியாக வாழ, ஏழை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் இதய சிம்மாசனத்தில் நீங்காத இடம் பிடித்த (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சரித்திர சாதனையைக் கண்ட, வெற்றி கண்ட, இந்தியாவின் மாதர் குல தெய்வமே! தமிழக அரசியல் வரலாற்றிலேயே புதிய அத்தியாயத்தை உருவாக்கி, தீர்வு காண வந்த தீர்க்கதரிசியே! நீதி தவறாத ஆட்சி நடத்தும் தமிழின ஒட்டுமொத்தத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக அவதரித்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே! எத்தனைக் கூட்டணிகள் சேர்ந்தாலும் அந்தக் கூட்டணியைத் தவிடு பொடியாக்கும் மக்கள் சக்தியே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும ஒலி) அம்மா, தமிழகத்தின் திட்டங்களைப் பார்த்து, அயல் நாடுகளே பாராட்டுகின்றன அம்மா! உங்கள் திறமையினால் கண்பட்ட இடமெல்லாம் உங்கள் கைக்கு வந்து சேரும் அம்மா! உங்கள் கால் பட்ட இடமெல்லாம் உங்கள் சரித்திரம் பேசும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவகாரன் பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லையென்றாலும் எருமப்பட்டி ஒன்றியத்திலுள்ள செவந்திப்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், கொல்லிமலையில் உள்ள சோளக்காட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடித் துடித்த மக்களின், அவர்தம் நாடித்

துடிப்பை அறிந்து துயர் துடைப்பவர்தான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில் மட்டும் வரலாற்று நிகழ்வாக 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசாணை வழங்கி, அவர்களுடைய பொற்கரங்களாலேயே திறந்து வைத்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது குறிப்பிடுகின்ற செவந்திப்பட்டி, கொல்லிமலை ஆகியவை மலை சார்ந்த பகுதிகளில் வருகின்ற காரணத்தினாலே முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைக்கும், செவந்திப்பட்டிக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன். நன்றி அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]